கல்குடா கல்வி வலய வளநிலைய பரீட்சை சபை

பயிற்சிப் பரீட்சை கூ.பொ.த (உ/த) – 2018 பூலை

தரம்: 12 (2019)	தவணை: 03	வணிகக்கல்வி I&II	நேரம்: 3மணி
சுட்டெண்/பெயர்:-			புள்ளிகள்:

பகுதி I

1 – 20 வரையயான வினாக்களுக்கு சரியான விடையினை தெரிவு செய்க.

1) மனித தேவை விருப்பங்களை பூர்த்தி செய்வதற்கு அவசியமான பொருட்களின் பண்பாகக் கருதக்கூடியது
   i) வரையறுக்கப்பட்டது ii) களஞ்சியப்படுத்தக் கூடியது
   iii) ஓரினத் தன்மையற்றது iv) தோற்றுவிக்கக் கூடியது
   v) உயிர் வாழ்வதற்கு அவசியமானது

2) வணிகப் படிமுறையின் முதலாம் கட்டமான பண்டமாற்று முறையில் காணப்பட்ட குறைபாடாகக் கருதக் கூடியது
   i) மிகை உற்பத்தி காணப்படல்
   ii) விரைவான வணிக நடவடிக்கை
   iii) இரு தரப்பினருக்குமிடையில் உடன்பாட்டுத்தன்மை
   iv) பெறுமதி அளவிடுவதில் சிரமம்
   v) கிரயம் குறைவு

3) பின்வருவன உற்பத்தி நிறுவனங்களாகும்
   A நிதி, காப்புறுதி, வீட்டுநிலம்
   B சுரங்கமறுத்தலும் கனிய அகழ்வும்
   C தேசிய பாதுகாப்பு
   D நீர் சுத்திகரிப்பும் விநியோகமும்
   E கழிவகற்றும் முகாமைத்துவம்
   இவற்றுள் துறைரீதியாக வகைப்படுத்துமிடத்து கைத்தொழில் துறையில் உள்ளடங்குவன
   i) A B ii) B C D iii) B D E iv) A D E v) A B E

4) பின்வருவன ஒரு வணிகமொன்றின் அகச் சூழல் காரணிகளில் உள்ளடங்கும் விடயங்களாகும்
   A சிறந்த மனப்பாங்கு காணப்படல்
   B பயிற்சியும் அனுபவமும்
   C தரமானதாகக் காணப்படல்
   D மோதல் உருவாதல்
   E உயர் மேற்பார்வை காணப்படல்
   F விருத்தியடைந்த ஒழுக்கம்
   மேற்குறிப்பிடப்பட்டவற்றுள் நிறுவன கலாசாரத்தின் பலம் பலவீனத்தை உள்ளடக்கிய விடை
   i) A B ii) E F iii) A E iv) A F v) A C

5) பின்வரும் அட்டவணையில் X நிரலானது கழிவு முகாமைத்துவ முறைகளையும் Y நிரலானது அதில் உள்ளடக்கக் கூடிய செயற்பாடுகளையும் காட்டுகின்றது

X		Y
1. மீள் சுழற்சி	-	A நன்னீர் மின் வளர்ப்பு
2. மீள் வாவனை		B பிளாஸ்ரிக் கொள்கலன் பயன்படுத்தாமை
3. மீள் உருவாக்கம்		C வாகனங்களை உடைத்து இரும்பாக மாற்றல்
4. பாவனை குறைத்தல்		D உணவுப் பொதி செய்வதற்கு உணவுப் பெட்டிகளை பயன்படுத்தல்

www.lkedu.lk

சரியாக தொடர்புபடும் விடையை தெரிவு செய்க

i) 1-A, 2 -B, 3-C, 4-D ii) 1-C, 2-D, 3-B, 4-A

iii) 1-D, 2-C, 3-B, 4-A iv) 1-C, 2-D, 3-A, 4-B v) 1-B, 2-C, 3-D, 4-A

6) இலங்கைத் தரக்கட்டளைகள் நிறுவனத்தினால் வழங்கப்படும் தரச்சான்று அல்லாதது

i) ஏற்றுமதிச் பரிசோதனைச் சான்றிதழ் ii) இறக்குமதி பரிசோதனைச் சான்றிதழ்

iii) ISO தரச் சான்றிதழ் iv) உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்

v) SLS தரச் சான்றிதழ்

7) பின்வருவன பங்குடமை தொடர்பான சட்டங்களும் அதனுடன் தொடர்புடைய விடயங்களும் ஆகும்

X

A – 1890 பங்குடமை கட்டளைச் சட்டம்

B - 2007 07 ஆம் இலக்க கம்பனிச்சட்டம்

C - 1840 மோசடி தடுப்புச் சட்டம்

D - 1918 6 ஆம் இலக்க வணிகப் பெயர் பதிவுச் சட்டம்

Y

1 – பங்குடமை ஒப்பந்தம் எழுத்தில் காணப்படல்

2 - இலாபநட்ட பகிர்வு

3 – பங்காளர் உச்ச எண்ணிக்கை

4 – பொதுப் பெயராவின் பதிவு அவசியமாகும்

i) A-2, B-3, C-4, D-1 ii) A-3, B-2, C-4, D-1

iii) A-2, B-3, C-1, D-4 iv) A-1, B-2, C-3, D-4 v) A-2, B-4, C-3, D-1

8) பொதுக்கம்பனிகள் பாரியளவு மூலதனத்தை திரட்டக் கூடியதாக இருப்பதற்கு காரணம் எது?

1) சட்ட ஆளுமை 2) இயக்குநர் சபை முகாமை

3) வரையறுத்த பொறுப்பு 4) கூறப்பட்ட மூலதனம்

5) கட்டாயமாகப் பதிவு செய்தல்

9) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் கூட்டுறவுச் சங்கம் என்பவற்றை தோற்றுவிக்கும் போது ஆகக் குறைந்த அங்கத்தவர் தொகையைக் சரியாகக் காட்டும் விடை

i) 10, 2 ii) 10, 1

iii) 1, 2 iv) 1, 10

v) 2, 1

10) பின்வருவன சில அங்கீகார வணிகங்களாகும். அவற்றிக்கான உதாரணங்கள் தரப்படுகின்றன?

A – MC Donatid B – Coco Cola C- IOC D- KFC E- Pizza hut

அவற்றுள் உற்பத்தி அங்கீகார வணிகத்தை காட்டும் விடைத் தொகுதி

i) A ii) B iii) E iv) C v) D

11) சர்வதேச தொழிலாளர் அமைப்பினால் முயற்சியாண்மைக்கு வழங்கப்பட்டுள்ள வரைவிலக்கணம்

(i) நிச்சியமற்ற நிலைமைகளுக்கு முகம் கொடுப்பது முயற்சியாண்மை ஆகும்

(ii) மூலதனத்திற்கும் ஊழியத்திற்குமிடையே இடைநடுவாக செயற்படல் முயற்சியாண்மை ஆகும்

(iii) புதிய வணிகமொன்றை விரிவுபடுத்தி வெற்றிகரமாக நடத்திச் செல்வதற்காக இருக்கும் ஆற்றல் முயற்சியாண்மை ஆகும்

iv) சந்தர்ப்பம் உன்றை உருவாக்கி அதிலிருந்து நன்மைகளைப் பெறுவதற்காக ஆற்றல் முயற்சியாண்மை ஆகும்

v) புதிய பொருட்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் நடைமுறைகள் மாற்றுதல் முயற்சியாண்மை ஆகும்

12) சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் வங்கியின் அனுசரனையுடன் தேசிய அபிவிருத்தி வங்கியின் மீள்நிதியீட்டத்துடனும் சிறு முயற்சியாளரை ஊக்குவிப்பதற்கு நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கடன் திட்டம் எது?

i) சனச ii) சுவன iii) சஹன்யா iv) கமீர v) சமூர்த்தி கடன் திட்டம்

www.ikou.lk

13) பின்வருவனவற்றுள் உத்தரவுப் பத்திரம் பெற்ற நிதிக் கம்பனிகளுள் ஒன்று ?

i) வரை இசுறு லீசிங் கம்பனி

ii) வரை எம்பி எஸ் லீசிங் கம்பனி

ii) வரை அசட்லைன் லீசிங் கம்பனி

iv) வரை எல் பி பினான்ஸ் கம்பனி

v) வரை கப்பிடல் எலயன்ஸ் கம்பனி

14) பிரியா என்பவர் காப்புறுதி ஒப்பந்தத்தினைப் பெற்றுக் கொள்ளும் போது தனது நோயினை வெளிப்படுத்தாமையினால் இழப்பீட்டினை பெற முடியாதுள்ளது. இது எந்த காப்புறுதி கோட்பாட்டுடன் தொடர்புடையது.

i) இழப்பீட்டுத் தத்துவம் ii) பதிலாள் வைப்புத் தத்துவம்

iii) அண்மிய காரணத் தத்துவம் iv) உச்ச நம்பிக்கைத் தத்துவம்

v) பங்களிப்புத்தத்துவம்

15) சமிக்கைகளும் குறியீடுகளும் ஊடகமாகப் பயன்படுத்தும் போது அகரீதியான தொடர்பாடலில் இலத்திரனியல் முறை அல்லாதது

i) இலத்திரனியல் மணி ii) நடுவர் தீர்மானம்

iii) பொதிக் குறியீடு iv) மின்சமிக்ஞை

v) வீதிக் குறியீடுகள்

16) மட்டக்களப்பிலிருந்து கொழும்புக்கு தயிர் எடுத்துச் செல்வதற்கு பொருத்தமான போக்குவரத்து முறையையும் ஊடகத்தையும் குறிப்பிடுக?

i) வீதிப் போக்குவரத்து பேருந்து ii) ஆகாயப் போக்குவரத்து விமானம்

iii) நீர்வழிப் போக்குவரத்து கப்பல் iv) புகையிரதப் போக்குவரத்து புகையிரதம்

v) வீதிப் போக்குவரத்து மோட்டார் சைக்கிள்

17) முதல்வர் சார்பாக பொருட்களை கொள்வனவு செய்யும் பொழுது அக் கொடுக்கல் வாங்கல்களை தனது தனிப்பட்ட பெயரில் மேற்கொள்பவர்?

i) காரணிகர் ii) தரகு முகவர்

iii) தரகர் iv) பொறுப்பு முகவர்

v) பொறுப்புத் தரகர்

18) வெற்றிலை இரத்தினக்கல் அனுமதிப்பத்திரம் வழங்கும் நிறுவனங்களுள் பொருட்களுக்கு ஏற்றுமதி இறக்குமதி அனுமதிப்த்திரம் வழங்கும் நிறுவனம் எது?

i) இலங்கை தேயிலை சபை, இரத்தினக் கல் அதிகாரசபை

ii) ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம், இரத்தினக்கல் தங்க ஆபரண அதிகாரசபை

iii) கமநல சேவைத் திணைக்களம், ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம்,

iv) ஏற்றுமதி அபிவிருத்திசபை, ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம்,

v) ஏற்றுமதி அபிவிருத்திசபை இரத்தினக்கல் கூட்டுத்தாபணம்

19) சுதந்திர வர்த்தகத்திற்கு சார்பான சர்வதேச அமைப்புக்களில் ஒன்று?

i) E U ii) SAFTA

iii) WTO iv) ASEAN

v) G 8

20) ஐரோப்பிய ஒன்றிய நாடு அல்லாதது?

i) பிரான்ஸ் ii) ஸ்பெயின்

iii) பல்கேரியா iv) கனடா

iv) போலந்து

www.kedu.lk

21 தொடக்கம் 25 வரையான வினாக்களுக்கு சரியான விடை தருக?

21) இலங்கையின் மத்திய வங்கியின் அறிக்கைப்படி ஏற்றுமதி வகுதிகள் யாவை?

……

……

……

……

22) சார்க் அமைப்பிலுள்ள நாடுகள் எவை?

…….. …….. …… ……

……. …… …….. ……

23) பொறுப்பு காப்புறுதி வகைகள் இரண்டு தருக?

……..

…….

24) இலங்கையிலுள்ள சர்வதேச விமான நிலையங்களின் பெயர்களைக் குறிப்பிடுக?

……

……

25) தொடர்பாடல் செயன்முயையொன்றிலுள்ள பிரதான அம்சங்கள் எவை?

……. …… …….

…… …….. ……

பகுதி II

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக?

1) (i) " மனித தேவைகள் விருப்பங்கள் நிறைவேற்றுவதற்கு தேவையான பொருட்கள் சேவைகள் சந்தை மூலமே பெற்றுக் கொள்ளப்படும்.
(அ) இங்கு சந்தை என்பதன் கருத்தை விளக்குக?
(ஆ) தற்காலத்தில் சந்தையின் வடிவமானது எவ்வாறு மாற்றமடைந்து வருகின்றது என விளக்குக?

(ii) மரத்தளபாடங்களை உற்பத்தி செய்யம் வணிகமொன்றின் வணிகச் செயற்பாடுகளை உள்ளீட்டு வெளியீட்டு செயன்முறையினை வரைபடம் மூலம் விளக்குக?

(iii) (அ) அண்மிய சூழல் காரணிகளில் ஒன்றாக வாடிக்கையாளரின் செயற்பாடுகளினால் வணிகமொன்றில் ஏற்படக்கூடிய தாக்கங்களை உதாரணம் மூலம் குறிப்பிடுக?

(ஆ) இயற்கைச் சூழலில் ஏற்படும் மாற்றங்கள் வணிகக் கருமங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் உதாரணம் தந்து விளக்குக?

(iv) (அ) வணிகத்தின் மீது அக்கறை செலுத்தும் பிரிவினருக்கும் அழுத்தங்களை ஏற்படுத்தும் காரணிகளாக எவற்றைக் குறிப்பிடலாம்?
(ஆ) வணிகங்கள் சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டிய தரப்பினரைக் குறிப்பிடுக?

(v) நிலைபேறான அபிவிருத்திக்கான வணிகங்களில் நவீன பயன்பாடு முறைகளில் ஒன்றான 4R எண்ணக்கருவினை விளக்குக?

(4×5= 20 புள்ளிகள்)

2) (i) (அ) நாட்டின் பணநிரம்பலைக் கட்டுப்படுத்துவதற்காக அரசு பின்பற்றும் கொள்கையாக நிதிக் கொள்கை காணப்படுகின்றது. இதற்காக பயன்படுத்தும் கருவிகளில் ஒன்றான வட்டிவீதம் தொடர்பாக விளக்கம் தருக?
(ஆ) அரச செலவீனங்களை வகைப்படுத்தி உதாரணம் தருக?

www.lkedu.lk

(ii) "நுகர்வோர் வழங்கும் விலைக்குத் தேவையான அளவில் திருப்தியைப் பெற்றுக் கொள்வதை உறுதிப்படுத்துவதற்கு நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்பை வழங்குகின்றன.
(அ) சர்வதேச ரீதியாக பிரகடனப்படுத்தப்பட்ட நுகர்வோர் உரிமைகள் யாவை?
(ஆ) இலங்கையில் நுகர்வோர் பாதுகாப்பிற்காக தொழிற்படுகின்ற அரச நிறுவனங்கள் நான்கினைக் குறிப்பிடுக?

(iii) தனியாள் உடமை வணிகத்தினையும் பங்குடமை வணிகத்தினையும் பின்வரும் நியதிகளுக்கு அமைவாக வேறுபடுத்துக?
அங்கத்தவர் எண்ணிக்கை ஈடுபடுத்தப்படும் மூலதனம்
நிர்வாகம்
பொறுப்பு
இலாப நட்டப் பகிர்வு

(iv) (அ) பிணையால் வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றின் பண்புகள் இரண்டு தருக?

(ஆ) கூட்டுறவு வணிகம் பதிவு செய்யும் போது சமர்ப்பிக்கவேண்டிய ஆவணங்கள் யாவை?

(v) (அ) வணிகங்கள் இணைந்து செயற்படும் முறைகளைக் குறிப்பிட்டு அவற்றில் ஒன்றை உதாரணத்துடன் விளக்குக?
(ஆ) அரச கூட்டுத்தாபனங்களுக்கு உதாரணம் தருக?

(4×5= 20 புள்ளிகள்)

3) (i) (அ) சமூக முயற்சியாண்மை எனும் பதத்தை விளக்குக?
(ஆ) முயற்சியாண்மைச் செயன்முறையினை வரைபடம் மூலம் விளக்குக?

(ii) ஒருவர் முயற்சியாளராவதற்கு விருத்தி செய்து கொள்ள வேண்டிய பண்புகள் இரண்டினையும் அதனை விருத்தி செய்வதற்கு பின்பற்ற வேண்டிய செயற்பாடுகளையும் தருக?

(iii) ஒரு முயற்சியாளருக்கும் வணிகர் ஒருவருக்குமிடையிலான வேறுபாடுகளை பட்டியலிடுக?
(iv) (அ) சிறிய நடுத்தர வணிகர்களின் பொதுவான பண்புகள் நான்கு தருக?
(ஆ) ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு சிறிய நடுத்தர வணிகங்கள் பங்களிப்புச் செய்யப்படும் முறைகளை குறிப்பிடுக?

(v) (அ) சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களை ஊக்குவிப்பதற்காக வழிமுறைகள் இரண்டும் எவை?
(ஆ) சிறிய நடுத்தர வணிகங்களுக்கு ஊக்குவிப்பு வழங்கும் அரச அல்லாத ஏனைய நிறுவனங்கள் நான்கு தருக?

(4×5= 20 புள்ளிகள்)

4) (i) "பொருட்கள் சேவைகளின் பரிமாற்றத்தின் போது பொதுவான ஏற்றுக் கொள்ளப்படும் எந்தவொரு ஊடகமும் பணமாகக் கருதப்படும்.
(அ) நல்ல பணத்தின் பண்புகளாக கொள்ளக் கூடியவை யாவை?
(ஆ) இலத்திரனியல் பணம் என்பதற்கு உதாரணம் தந்து விளக்குக?

(ii) (அ) அலகுப் பொறுப்பு நிறுவனத்தின் கட்டமைப்பில் உள்ளடக்கப்படும் தரப்பினர் யாவர்?
(ஆ) இலங்கை மத்திய வங்கியின் குறிக்கோள்கள் யாவை?

(iii) (அ) வணிகங்களினால் ஏற்கப்படும் நடைமுறை வைப்பு சேமிப்பு வைப்பு என்பவற்றை வேறுபடுத்துக?

(ஆ) வணிகங்களின் இணைய வங்கிச் சேவைகளுக்கு உதாரணம் தருக?

(iv) (அ) காசோலை ஒன்றில் புறக்குறிப்பிடல் தேவைப்படும் சந்தர்ப்பங்கள் யாவை?
(ஆ) காசோலையின் சிறப்பு முறைக் குறுக்கு கோடிடல் என்றால் என்ன?

www.ikeu.lk

(v) (அ) காப்புறுதி செய்யக் கூடிய இடர்களின் பண்புகள் நான்கு தருக?

(ஆ) காப்புறுதி ஒப்பந்தம் ஒன்று செல்லுபடியாவதற்கு காணப்பட வேண்டிய அம்சங்கள் எவை?

(4×5= 20 புள்ளிகள்)

5) (i) "தொடர்பாடலானது வணிக நடவடிக்கைகளுக்கு மட்டுமன்றி சமூக நடவடிக்கைகளுக்கும் முக்கியமானது".
(அ) தொடர்பாடல் செயன்முறையை விளக்குக?
(ஆ) செய்தி ஒன்றை தயாரிக்கும்போது கவனிக்க வேண்டிய விடயங்கள் யாவை?

(ii) (அ) எழுத்து மூல ஊடகம் ஒன்றை தெரிவு செய்யும் போது அகத்தொடர்பாடலுக்கு பயன்படுத்தக் கூடிய இலத்திரனியல் முறை, இலத்திரனியல் அல்லாத முறைத் தொடர்பாடலைக் தனித்தனியே குறிப்பிடுக?

(iii) (அ) போக்குவரத்துச் சேவையின் மூலம் வணிகர் ஒருவர் பெற்றுக் கொள்ளக்கூடிய அனுகூலங்கள் இரண்டு தருக?
(ஆ) தரைவழிப் போக்குவரத்துடன் ஒப்பிடுமிடத்து ஆகாய வழிப் போக்குவரத்திலுள்ள அனுகூலங்கள் எவை?

(iv) (அ) போக்குவரத்து துறையின் போக்கானது வளர்ச்சியடைந்த வண்ணம் உள்ளது. இதற்கமைய அண்மைக்காலத்தில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற விருத்தி நடவடிக்கைகள் நான்கு தருக?
(ஆ) போக்குவரத்து துறையின் எதிர்காலத்தை எதிர்வு கூறுவதற்கான உதாரணங்கள் இரண்டு தருக?

(v) (அ) களஞ்சியசாலை ஒன்றை நிறுவும்பொழுது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் இரண்டு தருக?
(ஆ) போக்குவுரத்து வழங்கல் சேவை முறையொன்றில் அடிப்படைச் செயன்முறைகள் எவை?

(4×5= 20 புள்ளிகள்)

6) (i) (அ) நுகர்வுப் பொருட்களை விநியோகிக்கும் வழிமுறைகளைக் குறிப்பிடுக?
(ஆ) சில்லறை வியாபாரத்தின் நவீன போக்குகள் குறிப்பிடுக?

(ii) (அ) ஒரு நாடு வெளிநாட்டு வியாபாரத்தில் ஈடுபடுவதன் மூலம் பெற்றுக் கொள்ளக் கூடிய அனுகூலங்கள் நான்கு தருக?
(ஆ) ஏற்றுமதி நடைமுறைகளைத் தருக?

(iii) பின்வரும் பதங்களை விளக்குக?
(அ) சுகநலச் சான்றிதழ்
(ஆ) நாணய கடிதம்
(இ) சுமைச்சீட்டு
(ஈ) கட்டுண்ட பண்டகசாலை

(iv) (அ) சர்வதேச வியாபாரத் தடைகளை நீக்கி சுதந்திர வர்த்தகத்தை ஏற்படுத்துவதற்கான வியாபார வலயங்கள் இரண்டு தருக?
(ஆ) தென்னாசிய சுதந்திர வியாபார ஒப்பந்தத்தின் நோக்கங்கள் யாது?

(v) (அ) சர்வதேச நாணய நிதியம் தொடர்பாக விபரிக்குக?
(ஆ) இலத்திரனியல் வியாபாரம் இடம்பெறும் முறைகளுக்கு நான்கு உதாரணம் தருக?

(4×5= 20 புள்ளிகள்)

www.kedu.lk